RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1721

OPEN ACCESS

# கொல்லிமலை மாசி பெரியண்ணசாமி - வேண்டுதல்களும் நேர்த்திக் கடன்களும்

**இரா. சம்பத்குமார் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# Kollimalai Masi Periyannasamy – Prayers and Offerings

**R. Sambathkumar [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts & Science (Autonomous), Coimbatore-641014, Tamil Nadu, India.

* Corresponding Author: samsambath999@gmail.com

Received: 11-04-2022
Revised: 29-10-2022
Accepted: 12-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Masi Periyannasamy is known as the village guardian deity located in Kollimalai Masi hills in Namakkal district. The structure of temple is built under a roof covered with grass. It has a lion as its vehicle. This temple at Masi hills is considered to be the original temple. It is said that Masi Periyannan Swamy temples have been constructed at Namakkal and Trichy by taking soil from this temple. The little deity is associated with folklore and dialects. This idolatry began to worship human beings in order to continuously exchange the memory of the ancestors who lived with them among the progeny and to worship them in the hope that they might help them in some way or the other. While prayer and offering obeisance are fundamental to these two forms of worship, it is different in terms of Saivism and Non-vegetarianism. In the form of minor deity worship, worship is mostly non-vegetarian. There is no sacrifice in the worship of the great deity. But it assumes significance in the worship of the minor deities. However, there is also a tendency for people who are overly believers in the worship of the deity to associate the minor deity with the deities like Shiva and Thirumal. But it does not have long-standing legends. Associated with folk tales, they see Shiva as the form and the incarnation of Thirumal. In this system, nowadays there is a tendency for people to see Kollimalai Masi Periyannasamy, a small deity, as an incarnation of Thirumal. In this article, the methods of worship performed to Masi Periyannasamy are dealt with.

**Keywords:** Kollimalai Hills, Worship, Masi Periyannasamy, Village Deity.

## முன்னுரை

மக்கள் தெய்வ வழிபாட்டில் இருபெரும் பிரிவுகள் உள்ளன. அவை, 1. பெருதெய்வ வழிபாடு 2. சிறுதெய்வ வழிபாடு. பெருதெய்வம் என்பது புராணக்கதைகளுடன், சமஸ்கிருத மயமாக்கலுடன் தொடர்புடையது. சிறுதெய்வம், நாட்டுப்புறக் கதைகளுடனும் வட்டார வழக்குடனும் இணைந்திருப்பது. இந்த சிறுதெய்வ வழிபாடானது, மனிதர்கள் தங்களுடன் வாழ்ந்த மூதாதையர்களின் நினைவை மரபுத் தொடர்ச்சியாகச் சந்ததிகளிடையே பரிமாறிக்கொள்ளவும், அவர்கள் தங்களுக்கு ஏதேனும் ஒருவிதத்தில் உதவக்கூடும் என்ற நம்பிக்கையிலும் அவர்களை வழிபடத் தொடங்கியதாகும் (Akilandeswari, 2021). இந்த இரு வழிபாட்டு முறையில் வேண்டுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல் என்பது அடிப்படையாக இருந்தாலும் சைவம், அசைவம் என்ற முறையில் இது வேறுபட்டு நிற்கின்றன. சிறுதெய்வ வழிபாட்டு முறையில் பெரும்பாலும் அசைவம் சார்ந்ததாகவே வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. பெருதெய்வ

வழிபாட்டு முறையில் பலியிடுதல் இல்லை. ஆனால் சிறுதெய்வ வழிபாட்டில் அது முக்கியத்துவம் பெறுகிறது. இருப்பினும் பெருதெய்வ வழிபாட்டில் அதீத நம்பிக்கை கொண்ட மக்கள் சிறுதெய்வத்தையும் சிவன், திருமால் போன்ற பெருதெய்வங்களுடன் தொடர்புபடுத்தும் போக்கும் காணப்படுகிறது. ஆனால் இதற்கு நீண்ட நெடிய புராணக்கதைகள் கிடையாது. நாட்டார் கதைகளுடன் தொடர்புபடுத்தி சிவன் வடிவமாகவும், திருமாலின் அவதாரமாகவும் காண்கின்றனர் (Maruthadurai, 2009). இந்த முறைமையில், தற்காலத்தில் கொல்லிமலை மாசி பெரியண்ணசாமி என்ற சிறுதெய்வத்தை மக்கள் திருமாலின் அவதாரமாகப் பார்க்கும் போக்கு காணப்படுகிறது. இருப்பினும் பெருதெய்வ வழிபாட்டிற்கான எந்தவித வழிபாட்டு முறைகளும் அத்தெய்வத்திற்குப் பின்பற்றப்படுவதில்லை.

## சிறுதெய்வ வழிபாட்டு முறைமைகள்

மக்கள் தங்களுடைய இரகசியங்களை வெளிப்படுத்த சிறந்த ஊடகமாகக் கடவுள் கருத்தியலைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். சிறுதெய்வ வழிபாட்டில் மக்கள் தங்களது வேண்டுதல்களைப் பல்வேறு விதமாக நிகழ்த்தி வருகின்றனர். இந்த முறையை இருவழிகளில் காணமுடிகிறது.

1. வேண்டுதல் நிறைவேற நிகழ்த்தும் வழிபாடு
2. வேண்டுதல் நிறைவேறிய பின் செய்யப்படும் வழிபாடு

இந்த இரு பகுப்பை முன்வைத்து மாசி பெரியண்ணசாமிக்கு நிகழ்த்தப்படும் வழிபாட்டு முறைகள் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றன.

## வேண்டுதல் நிறைவேற நிகழ்த்தும் வழிபாடு

மக்கள் தான் எண்ணிய காரியம் விரைந்து நிறைவேற செய்யும் வழிபாடு வேண்டுதல் நிறைவேற நிகழ்த்தும் வழிபாடாகும். இந்த வழிபாடானது மாசி பெரியண்ணசாமிக்கு, தகடு கட்டுதல், காசு அடித்தல், பலி கொடுத்தல், சேவல் குத்துதல், தொட்டில் கட்டுதல், சாமியாடுதல், கல்வீடு அமைத்தல், பில்லி சூனியம் வைத்தல், எடுத்தல் வசியம் பண்ணுதல், சந்திப்பு அட்டை கட்டுதல் என்ற அடிப்படையில் வழிபாட்டு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வழிபாட்டு முறையில் தகடு கட்டுதல், காசு அடித்தல், பலி கொடுத்தல், சேவல் குத்துதல், தொட்டில் கட்டுதல், சாமியாடுதல், கல்வீடு அமைத்தல் என்பவை மட்டும் எடுத்துரைக்கப்படுகின்றன.

## தகடு கட்டுதல்

பெரும்பாலான கோவில்களில் பக்தர்கள் வேண்டுதல் நிறைவேற, தான் வேண்டுவனவற்றை சிறிய காகிதத்தில் எழுதி அதை நூலைக் கொண்டு மாலையாகக் கட்டி சாமியின் கழுத்திலோ அல்லது கோவிலில் உள்ள மரத்திலோ கட்டுவது வழக்கம். அப்படியான ஒரு நம்பிக்கையே இக்கோவிலில் புது வடிவம் பெற்றுள்ளது.

கோவிலில் மாசி பெரியண்ணசாமிக்கு அருகில் இருக்கும் கருப்பராயன் சன்னதியில் விற்கப்படும் பித்தளை தகடில் கருப்பராயனிடம் வேண்டி சக்கரம் வரைந்து - '20'ரூபாய்க்குக் கொடுக்கப்படுகிறது. பக்தர்கள் மாசி பெரியண்ணசாமியையும், கருப்பராயனையும் நன்கு மனதில் வேண்டி சக்கரம் பொறிக்கப்பட்ட தகடில் தம் வேண்டுதலைக் கூர்மையான பொருளைக் கொண்டு எழுத வேண்டும். பின்பு அந்த தகடைச் சுருட்டி பூசாரியிடம் நூலைப் பெற்று,நன்றாகக் கட்டி, சாமியை வேண்டி கோவிலில் உள்ள மரம், வேல் முதலானவற்றில் அதைக் கட்டிவைத்து பின் அங்குள்ள வேலில் சாமியிடம் வைத்து பூசிக்கப்பட்ட எழுமிச்சைப் பழத்தைக் குத்துவர். இதன்மூலம் மனிதர் தம் மனதில் எண்ணியது கண்டிப்பாக நிறைவேறும் என்று நம்பிக்கை கொள்கின்றனர்.

## காசு அடித்தல்

ஒவ்வொரு கோவிலிலும் 'தல விருட்சம்' கண்டிப்பாக இடம்பெறும். அதுபோன்று மாசி பெரியண்ண சாமி கோவிலில் மூலச்சன்னதிக்கு பின்புறம் அமைந்துள்ள தல விருட்ச மரம் 'மகாகனி' - இம்மரம் மிகவும் பழமை வாய்ந்த மரமாகக் கருதப்படுகிறது.

"இம்மரம் ஏப்ரல் மாதத்தில் பூ பூக்கிறது. இந்தபூக்கள் பச்சை சாயலையுடைய மஞ்சள் நிறமானவை. இந்த மரத்தின் கனி நீள உருண்டை வடிவத்தில் கட்டையை போன்று தோடுடையதாக இருக்கும். இந்த காய்கள் வானத்தை நோக்கியிருக்கும்" என்று இம்மரத்தின் தன்மை குறிப்பிடப்படுகிறது. அத்துடன், "இம்மரம் பெரும்பாலும் பலகைகளுக்காக வளர்க்கப்படுகிறது. படகு செய்வதற்கும், இசைக் கருவிகள் செய்வதற்கும், விமானத்தின் ஒட்டுப் பலகைகள், பென்சில் தயாரிப்பதற்கும் இதனுடைய மரப்பலகைப் பயன்படுத்தப்படுகிறது." என்று குறிப்பிடுகிறது. இம்மரம் தேக்குமரத்துக்கு இணையானது என்றும், அதிக விலைக்கு விற்கக் கூடியது என்றும் கூறப்படுகிறது.

மாசி பெரியண்ணசாமியை வழிபடும் மக்கள் தல விருட்சமாக அமைந்திருக்கும் மகாகனி மரத்தில் தங்களின் நாணயங்களைப் பதித்துவிட்டுச் செல்வர். சிலர் கோவிலில் உண்டியல் இல்லாததால் சாமிக்கு காணிக்கையைத் தல விருட்சத்தில் பதிப்பதாகவும் கூறுகின்றனர். மரத்தில் அடிக்கும் காசு எவ்வாறு நீண்ட ஆண்டுகள் நிலைத்திருக்கிறதோ அதுபோல செல்வமும் இவர்களிடம் நிலைத்திருக்கும் என்று நம்பிக்கை கொள்கின்றனர்.

## தொட்டில் கட்டுதல்

திருமணமாகி நெடுநாள் குழந்தை இல்லாதவர்கள் சாமியை வேண்டி பூசை செய்து, மலையில் உள்ள ஒரு கல்லை எடுத்து துணியினுள் வைத்து அதைத் தொட்டிலாகப் பாவித்து அங்குள்ள மரம் மற்றும் வேலில் கட்டுவர். இதன்மூலம் அவர்களுக்கு குழந்தை பிறக்கும் என நம்பிக்கை கொள்கின்றனர். தாங்கள் விரும்பிய குழந்தை பெண் குழந்தையோ, ஆண் குழந்தையோ வேண்டும் என்பவர்கள் தகடு கட்டுவது மட்டும் அல்லாமல் தொட்டில் கட்டியும் தங்கள் விரும்பும் குழந்தையைச் சாமியிடம் வேண்டிக் கொள்கின்றனர். இந்த வழிபாடானது பெரும்பாலும் பெண் தெய்வங்களிடம் தான் காணப்படுகிறது. ஆனால் சமீப காலங்களில் ஆண் தெய்வங்களிடமும் வேண்டிக் கொள்கின்றனர்.

## பலியிடுதல்

பலியிடுதல் என்பது காலங்காலமாக நிகழும் நாட்டுப்புற வழக்கமாக உள்ளது. இந்த பலியிடுதலில் ஆண் இனத்தைச் சார்ந்த விலங்குகள், பறவைகள் மட்டுமே பலியிடப்படுகின்றன. இதற்குக் காரணமாக, "சமூக ஒடுக்குதலின் ஆவேச நிலையில் தெய்வமடைந்த பெண்கள் தங்கள் ஒடுக்கப்பட்ட ஆழ்மனவெளிப்பாடாக ஆண் குறியீடுகளை உயிர்ப்பலிகளாகப் பெற்றனர் என்றும் இதனாலே ஆண்மகன், ஆண் எருமை, ஆண் ஆடு, ஆண் கோழி என்ற வரிசை ஆண் குறியீடாய்ப் பலி கொள்ளப்பட்டது என்றும் குறிப்பிடப்படுகிறது" என்று எடுத்துரைக்கிறார் (Bhakthavatsala Bharathi, 2011). இதேபோன்று "இரத்த பலி என்பது பொதுவாக ஆண் விலங்குகளையும் பறவைகளையுமே குறிக்கும். உயிர்ப்பெருக்கத்திற்குக் காரணமான பெண் உயிரிகளைப் பலி கொடுத்தால் தெய்வம் தண்டிக்கும் என்ற தொன்மையான நம்பிக்கையே ஆணினத்தைப் பலியிடுவதற்குக் காரணம்" என்று குறிப்பிடுகிறார் (Paramasivan, 2016). இந்த பலியிடல் முறை பெண் தெய்வங்களும் ஆண் தெய்வங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. பெருதெய்வ வழிபாட்டில் இம்முறை இல்லை.

மாசி பெரியண்ண சாமி கோவிலிலும் தன்மீதான திருஷ்டி அகலவும், நோய் நீங்கவும் சாமிக்குப் புதிய ஆடை, தேங்காய், பழம் முதலான வழிபாட்டுப் பொருட்களுடன் 250 ரூபாய் பணம் செலுத்தி ஆடு பலியிட்டு இரத்தத்தைக் காணிக்கையாகக் கொடுக்கின்றனர். இதேபோல் 50 ரூபாயும் சேவலும் பலி கொடுக்கின்றனர். இதன்மூலம் நோய் நீங்கி பூரண குணம் பெறுவர் என நம்புகின்றனர்.

## சேவல் குத்துதல்

அனைத்து நாட்டுப்புற நம்பிக்கைகளிலும் பலியிடுதல் என்பது வழக்கமான வேண்டுதலாக இருந்தாலும், மாசி பெரியண்ணசாமிக் கோவிலில் சேவல் குத்துதல் என்பது எந்த இடத்திலும் அறிந்திடாத புதுமையான ரணம் மிகுந்த ஒரு நம்பிக்கையாகவே பின்பற்றப்படுகிறது. இந்த வழிபாட்டு முறைதான் இக்கோயிலின் சிறப்பாக மக்களால் கூறப்படுகிறது.

## சேவல் குத்தும் முறை

நல்லது நடத்தல் என்பதுக்கு மட்டுமின்றி அல்லதுக்குமான தெய்வம் மாசி பெரியண்ண சாமி. தன்னுடைய சொத்தை அபகரித்தவர்கள், துரோகம் செய்தவர்கள், துன்பம் இழைத்தவர்கள் முதலானவர்களை நேரடியாகப் பழிவாங்க முடியாதவர்கள் மாசி பெரியண்ணசாமிக் கோவிலுக்கு நன்கு வளர்ந்துள்ள சேவலைக் கொண்டு வந்து, யாருக்கு துன்பம் நேர வேண்டுமோ அவரைப் பற்றிய தகவலைச் சக்கரம் வரைந்த செப்புத் தகட்டில் எழுதி சாமியிடம் வைத்து வழிபாடு செய்து சேவலின் வலது காலில் அந்த செப்புத் தகடைக் கட்டி, அச்சேவலை உயிருடன் கோவிலின் முன்பு உள்ள வேலில் துன்பம் நேர வேண்டியவரை மனதில் நினைத்து குத்துகின்றனர். அந்த சேவல் எப்படி துடிதுடித்து இறக்கிறதோ அதுபோன்று தனக்குத் துன்பத்தை ஏற்படுத்தியவர்கள் துன்பம் அடைவர் என்று நம்புகின்றனர். வேறு சிலரிடத்தில், தங்களின் துன்பம் நீங்க சேவல் குத்துபவர்கள், சேவல் எப்படி உயிர் விடுகிறதோ அதுபோல் தங்கள் துன்பமும் நீங்கும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

## சாமியாடுதல்

தங்களுடைய பிரச்சனைகளை நேரடியாக இறைவனே வந்து கேட்டு அதற்கானத் தீர்வைச் சொல்லுவதாக மக்கள் நம்பும் ஒரு நம்பிக்கையே சாமியாடி குறி சொல்லுதலாகும். சாமியாடுபவர்கள் பெரும்பாலும் பெண்கள்தான். ஆனால் கோவிலில் பூசாரிகளாக இருக்கும் ஆண்கள் சாமியேறி பக்தர்களுக்கு குறி அல்லது வாக்கு சொல்லுவார். ஆணிவைத்த பாதணியின்மீது நின்று குறி சொல்லுவர்.

இதேபோல், மாசி பெரியண்ணசாமிக்குப் பூசை செய்யும் பூசாரி, இரண்டு பக்கமும் கைப்பிடி கொண்ட அருவாளை இருவர் பிடித்துக்கொள்ள, சாமியைத் தனக்குள் ஏற்றிக்கொண்ட பூசாரி, சுருட்டுக் குடித்துக்கொண்டே அருவாள் மீது ஏறி அங்கிருக்கும் பக்தர்களை அழைத்து அவர்களின் பிரச்சனைகளைக் கண்டறிந்து, அப்பிரச்சனைக்கான பரிகாரம் பூசையைத் தெய்வ வாக்காகக் கூறுகிறார். இதன்மூலம் தங்கள் பிரச்சனைகளை இறைவனே தீர்த்ததாகப் பக்தர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

## கல்வீடு அமைத்தல்

மனிதர்கள் அனைவருக்கும் வாழ்வதற்குச் சொந்தமாக ஒரு இடமும் வீடும் அத்தியாவசியானது. அதைக் கட்ட வேண்டும் என்ற ஆசையில் மக்கள் கல்வீடு அமைத்து தெய்வத்தை வழிபடுகின்றனர். இந்த கல்வீடு அமைத்தல், மலை உச்சியில் அமைந்திருக்கும் கோயில்களில் காணலாகும் வழிபாட்டு முறையாகும். மாசி பெரியண்ணசாமி கோவிலும் மலை உச்சியில் அமைந்திருப்பதால் அங்கும் இந்த வழிபாட்டு முறை காணப்படுகிறது.

மலை உச்சியெங்கும் ஆள் உயர பலகைக் கற்களால் அடுக்கி வைக்கப்பட்டுள்ள கல்வீடுகள் அங்கு நிறைந்து காணப்படுகிறது. மனிதனின் ஆசைகள் பெரும்பாலும் இறைவனால் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. அதன்படி மாசி பெரியண்ணசாமி சன்னதியின் அருகே பலகைக் கற்களை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி அதை வைத்து வேண்டினால் நாம் விரைவில் புதிய வீடு கட்டமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

## வேண்டுதல் நிறைவேறிய பின் செய்யப்படும் வழிபாடு

தனது வேண்டுதல் நிறைவேற செய்யும் வழிபாட்டு முறைகளைப்போல், அது நிறைவேறிய பின்பு அதற்கான நன்றிக்கடனைத் தெரிவிக்கும் விதமாக சில வழிபாட்டு முறைகளை மேற்கொள்கின்றனர். "நன்றி உணர்வை இறைவனிடம் காட்டுவது வழிபாடாகிறது (நாட்டுப்புறப்பண்பாட்டுக் கூறுகள், ப. 8)" என்று அரு. மருததுரை குறிப்பிடுகிறார். இது 'நேர்த்திக்கடன்' என்று அழைக்கப்படுகிறது. நேர்த்திக்கடன் செலுத்தாமல் காலம் கடத்தினால் தெய்வம் தண்டிக்கும் என்று மக்கள் நம்பி அதை விரைந்து நிறைவேற்ற முயல்கின்றனர். அவ்வாறு நேர்த்திக்கடன் செலுத்தும் வழிபாட்டு முறையில், மணிகட்டுதல், வேல் மற்றும் அருவா சாட்டுதல், நன்கொடை அளித்தல், பலியிடுதல் இவை முக்கியமானதாக அமைந்துள்ளது. இதில் மணிகட்டுதல், வேல் மற்றும் அருவா சாட்டுதல் விளக்கப்படுகிறது.

## மணி கட்டுதல்

மாசி பெரியண்ணசாமி மீது தீராத நம்பிக்கை கொண்ட மக்கள், அவர்களின் வேண்டுதலை அவரிடம் ஒப்படைத்து செல்வர். அவ்வேண்டுதல் நிறைவேறிய பின் அதற்கு நன்றிக்கடனாக மணி சாட்டுதல் (கட்டுதல்) என்பது முக்கியமான நேர்த்திக்கடனாக கருதப்படுகிறது. குழந்தை வரம் வேண்டியவர் குழந்தை பிறந்த பின் அக்குழந்தையின் பெயரை, புதிதாக ஒரு மணி வாங்கி அதில் வடித்து கோயிலில் கட்டிவிடுவர். மாசி பெரியண்ணசாமி பலரின் வேண்டுதலை நிறைவேற்றியதற்குச் சான்றாக கோயிலெங்கும் மணிகள் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது.

## வேல் மற்றும் அருவா சாட்டுதல்

தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பின் தவறாது கோயிலுக்குத் தங்கள் சார்பாக மிகப்பெரிய வேலையும், ஆளுயர அருவாளையும் காணிக்கையாகக் கொடுப்பதைப் பக்தர்கள் தொன்றுதொட்ட நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர். சன்னதியெங்கும் வேலும், அருவாளும் நிறைந்துள்ளன.

## முடிவுரை

சிறுதெய்வங்களை சிவன், திருமாலுடன் தொடர்புபடுத்தி நோக்கும் பார்வையை மாசி பெரியண்ண சாமி பொருத்திக் காணமுடிகிறது. வேண்டுதல் நிறைவேற நிகழ்த்தும் வழிபாட்டில் தகடு கட்டுதல், காசு அடித்தல், பலியிடுதல் போன்ற வழிபாட்டு முறைகளில் சேவல் குத்துதல் இந்த கோயிலில் காணப்படும் தனித்துவமாகும். வேண்டுதல் நிறைவேறிய பின் செய்யப்படும் வழிபாட்டு முறையில் மணி கட்டுதல், வேல் மற்றும் அருவா சாட்டுதல் முக்கியமான ஒன்றாக உள்ளது. மாசி பெரியண்ணசாமி சக்திவாய்ந்த தெய்வமாகப் பலதரப்பட்ட மக்களிடையே நம்பிக்கை நிலவுகிறது. அத்தெய்வத்தை வேண்டி வணங்கினால் அந்த வேண்டுதல் விரைந்து நிறைவேறும் என்பதற்குச் சான்றாக இந்தக் கோவிலில் கட்டப்பட்டுள்ள மணிகள், சாத்தப்பட்டுள்ள வேல் மற்றும் அரிவாள் ஆகியவை நிறைந்திருப்பதன் வழி உறுதிபடுகிறது.

## References

Akilandeswari, N. (2021) Small deity worship in Tamil culture, International Research Journal of Tamil, 3(S-1), 109-113. https://doi.org/10.34256/irjt21s117

Bhakthavatsala Bharathi, S. (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Maruthadurai, A. (2009) Nattupura Panpattu Kurukal, Saradha Pathippagam, Chennai, India.

Paramasivan, T. (2016) Dheivangalum Samooga Marapukalum, Kalachuvadu Publication, Nagercoil, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License